நாள்.10.03.2025

**அசல் வழக்கு எண். 22/2010**
**பெயர்.அப்பாசாமி**

**த.பெ.சுந்தரராஜ பிள்ளை**

**<u>வா.சா.2– 9ம் பிரதிவாதி தரப்பில் குறுக்கு விசாரணை தொடர்ச்சி</u>**

சர்வே எண்.341/2 ல் செட்டில்மெண்ட் பின்னர் புதிய சர்வே எண் மாறியுள்ளதாக சொல்லியுள்ளேன். ஆனால் அதற்கான ஆவணத்தை நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. தாக்கல் செய்துள்ளேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.56 ஆணவம் நான் தாக்கல் செய்தது என்றால் ஆமாம். அந்த ஆவணம் மாரியம்மாள் கிரையம் வாங்கிய சொத்திற்கான ஆவணம் என்றால் சரிதான். அந்த ஆவணத்தில் மாரியம்மாள் முதல் பக்கத்தில் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளார். 2வது பக்கத்திலும் ஆங்கிலத்தில் கையெழுத்து போட்டுள்ளார். 3வது பக்கத்தில் உள்ள எஸ்.மாரியம்மாள் என்று தமிழில் எழுதியிருப்பது சார்பதிவாளர் அலுவலகத்தில் நகல் தாக்கல் செய்தவர் என்று எழுதப்பட்டுள்ளது என்றால் சரிதான். அந்த 3வது பக்கத்தில் உள்ளது மாரியம்மாளின் கையெழுத்து அல்ல என்றால் தவறு. என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.50 ஆவணம் மூர்த்தி கிரையம் வாங்கிய கிரைய பத்திரத்தின் நகல் என்றால் சரிதான். இந்த ஆவணத்தின் நகலை 2008 லேயே நான் வாங்கியுள்ளேன் என்றால் சரிதான். இந்த வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எனக்கு மூர்த்தி கிரையம் வாங்கியது தெரியும் என்றால் எனக்கு தெரியாது. நான் வாங்கவில்லை. இந்த ஆவணத்தை வழக்கு தாக்கல் செய்த போது வழக்கோடு தாக்கல் செய்துள்ளேன் என்றால் சரிதான். நான் வழக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே மூர்த்தி அந்த ஆவணத்தில் கண்ட சொத்துகளை கிரையம் பெற்றுள்ளதால் அந்த சொத்துகள் இந்த வழக்கிற்கு கட்டுப்படாது என்றால் சரியல்ல. இதுவரையில் இந்த ஆவணத்தை செல்லாது என்று நான் எந்த பரிகாரமும் கேட்கவில்லை என்றால் சரிதான். மூர்த்தி கிரையம் வாங்கி இதுநாள் வரை அனுபவித்து வருகிறார் என்றால் இல்லை. என் அனுபவத்தில் உள்ளது. அதற்கு நான் எந்தவிதமான ஆவணமும் நீதிமன்றத்தில் தாக்கல் செய்யவில்லை என்றால் நான் தாக்கல் செய்துள்ளேன். மூர்த்தி கிரையம் வாங்கிய சொத்தை நான் இந்த வழக்கில் சேர்க்காமல் அவருக்கு இடையூறு கொடுத்து வருகிறேன் என்றால் சரியல்ல. வழக்கில் சேர்க்கப்பட்டுள்ளது. மூர்த்தி கிரையம் வாங்கிய சொத்துகளுக்கு உண்டான பத்திரம் பதிவு செய்யப்பட்டது. நான் தாக்கல் செய்த வா.சா.ஆ 1 பதிவு செய்யப்படாதது என்றால் சரிதான். நான் கிரைய முன் பணம் கொடுத்தது

வா.சா.1—க்கு தெரியுமா என்றால் விவரம் தெரியும். அவரிடம் சொல்லிவிட்டுதான் போனேன். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ.1 ஆவணத்தில் உள்ள பொன்னுசாமி கையெழுத்து சண்முக தேவர், மாரியம்மாள் முன்னிலையில் செய்யவில்லை என்றால் அவர்கள் முன்னிலையில் தான் கையெழுத்து போட்டார். நான் மாரியம்மாள் வீட்டிற்கு சென்று கையெழுத்து வாங்கியதாக சொல்லியுள்ளேன் என்றால் சரிதான். ஆனால் பொன்னுசாமி வாக்குமூலத்தில் "***என்னை சுந்தரராஜ பிள்ளை அவருடைய பிள்ளை அப்பாசாமி பிள்ளை, பாண்டியன், ராமானுஜம் மற்றும் மாரியம்மாள் ஆகியோர் அழைத்து சென்றார்கள்***" என்று சொல்லியுள்ளார் என்றால் சரிதான். பொன்னுசாமி வா.சா.ஆ.1 ல் எத்தனை கையெழுத்து போட்டுள்ளார் என்றால் 1 கையெழுத்து போட்டுள்ளார். புரோக்கர் மூலமாக விற்பனை செய்தது யார் என்றால் பாண்டியன். புரோக்கரும் குழி, செண்டின் விலை பற்றி தனித்து பேசவில்லை என்றால் மொத்தமாக தான் பேசினார்கள். சட்டப்படி பதிவு பெற்ற ஆவணம் மூலமாகதான் நான் எந்த உரிமையும் கொண்டாட முடியும் என்றால் சரிதான். மாரியம்மாள் தாக்கல் செய்துள்ள வக்காலத்திலும் வா.சா.ஆ.56 உள்ள கையெழுத்தும் ஒன்றுபோல தான் உள்ளது என்றால் இல்லை. வித்தியாசமாக உள்ளது. மூர்த்தி கிரையம் வாங்கி அனுபவித்துவருவதால் இந்த வழக்கில் நான் சுவாதீன பரிகாரம் கோரவில்லை என்றால் மேற்படி சொத்தை நான் அனுபவித்து வந்ததால் சுவாதீன பரிகாரம் கோரவில்லை. வா.சா.ஆ.1 ல் எனது தந்தை கையெழுத்து போட்டுள்ளார் என்றால் சரிதான். வா.சா.ஆ.1 ல் உள்ள எனது தந்தை கையெழுத்து என்று நிருபிக்க என்னால் வேறு ஆவணம் தாக்கல் செய்யமுடியாது என்றால் முடியும். இவ்வழக்கு தாக்கல் செய்யும் முன்பு இந்நீதிமன்றத்தில் அ.வ.எண்.237/2009 என்ற வழக்கில் தாவா சொத்துகளை பொறுத்து நிரந்தர உறுத்து கட்டளை பரிகாரம் கோரி வழக்கு தாக்கல் செய்துள்ளேன்.அது நிலுவையில் இருந்து வருகிறது என்றால் சரிதான். அ.வ.எண்.237/2009 வழக்கை தாக்கல் செய்வதற்கு இந்நீதிமன்றத்தில் எந்த முன் அனுமதியும் பெறவில்லை என்றால் முன் அனுமதி வாங்கியுள்ளேன். அந்த விவரத்தை பற்றி இந்த வழக்கில் சொல்லவில்லை என்றால் சொல்லியுள்ளேன். வா.சாஆ 1 கிரைய ஒப்பந்தப்படி எனக்கு எந்த உரிமையும் கிடைக்கதக்கதல்ல என்றால் தவறு. நான் தான்கிரைய ஒப்பந்தப்படி அனுபவித்து வருகிறேன். வா.சா.ஆ.1 மூலம் நான் அனுபவித்து வந்ததாக சொன்னாலும் மூர்த்தி கிரையம் வாங்கியதால் இவ்வழக்கு நிலைக்கதக்கதல்ல என்றால் தவறு. வா.சா.ஆ 1 மோசடியாக உற்பத்தி செய்யப்பட்டது, அதில் சண்முகதேவர், மாரியம்மாள் கையெழுத்து

போடவில்லைஅதனால் இந்த வழக்கை தள்ளுபடி செய்ய வேண்டும் என்றால் சரியல்ல. மூர்த்தி கிரையம் பெற்றசொத்துகளை பொறுத்து எந்த பாத்தியமும் நான் கொண்டாட உரிமை இல்லை என்றால் கிரைய ஒப்பந்தம் மூலம் எனக்கு உரிமை உள்ளது.

**மறுவிசாரணை இல்லை**

*Taken down by the typist to my dictation*
*in open Court read over to the*
*witness admitted and acknowledged*
***by him/her to be Correct.***

Tmt.S.Kavipriya,B.A.,L.L.B.,

District Munsif, Pattukkottai.